## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 28.03.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

*தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

அல்லாஹ்வின் ஒரு பண்புப்பெயர் ரஃபீக் என்பதாகும். ஹலீம் என்ற இறைவனின் பண்புப்பெயரும், ரஃபீக் என்ற பண்புப்பெயரும் ஒரே பொருளைக் கொண்ட பண்புப் பெயர்களாக உள்ளன. அதாவது, ரஃபீக் என்ற பண்புப்பெயருக்கு **மென்மையைக் கடைபிடிப்பவன்; இரக்கமுடன் நடந்து கொள்பவன்** என்ற பொருள்கள் உள்ளன. ரஃபீக் என்பதன் ஒரு பொருள் **தோழன்** என்பதாகும். இதைத் தவிர அகராதி வல்லுநர்கள் இதற்கு இன்னும் பல பொருள்களைத் தந்துள்ளனர். இந்தப் பண்புப் பெயருக்கு **இழப்பை ஏற்படுத்தாமல் இருப்பவன்** என்ற பொருளும் இருக்கின்றது. இழப்பை ஏற்படுத்தாமல் இருப்பதுடன் **நற்பலன்களையும், இலாபத்தையும் தரக்கூடியவன்; அனுதாபம் காட்டக்கூடியவன்; கருணை காட்டக் கூடியவன்; தனது பணிகளை எவ்வித குறையும் இல்லாமல் செய்பவன்; அப்பணிகளைச் சிறப்பாகச் செய்பவன்; தனது நண்பர்களுடன் சிறந்த முறையில் பரிமாறுபவன்; உதவி செய்பவன்** ஆகிய பொருள்கள் ரஃபீக் என்ற இறைவனின் இந்தப் பண்புப் பெயருக்கு இருக்கின்றது. இந்தப் பண்புப்பெயர் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் நமக்கு தெளிவாக புரிய வைத்துள்ளார்கள். 1903 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி தனக்கு ஓர் இல்ஹாம் வந்ததாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். அந்த இல்ஹாம் *ஸலாமுன் அலைக்கும் திப்தும் - அதாவது உமக்கு சமாதானம் உண்டாவதாக. மகிழ்ச்சியாக இருங்கள்* என்பதாகும்.

அந்த சமயத்தில் பிளேக் தொற்று நோயாகப் பரவி அழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால் அதுபற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கவலையடைந்தவாறு அதற்கு சிகிச்சையாக இறைவனின் *யா ஹஃபீஸ், யா அஸீஸ், யா ரஃபீக்* என்ற மூன்று பண்புப்பெயர்களைக் கூறிக்கொண்டிருக்கும் படி இறைவன் அவர்களிடம் கூறினான். அதுபற்றி கூறும்போது **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

ரஃபீக் என்ற பெயர் இறைவனின் புதிய பெயராகும். இதற்கு முன்னர் இறைவனின் பண்புப்பெயர்களில் இந்த பெயர் ஒருபோதும் வரவில்லை. எனவே, இறைவனின் ரஃபீக் என்ற பண்புப்பெயர் இழப்புகளிலிருந்து நம்மை பாதுகாப்பதுடன் நற்பலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டலையும் நமக்குத் தருகின்றது. மேலும் இறைவனின் பணி எல்லா குறைகளிலிருந்தும் தூய்மையானதாக இருக்கின்றது. மேலும் அவன் தனது அடியார்களுக்கு சிறந்த நண்பனாக இருக்கின்றான். ஒவ்வொரு நொடியும் அவர்களுக்கு அவன் உதவி செய்கின்றான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

புகாரியில் ஒரு ஹதீஸ் உள்ளது. ஒரு நம்பிக்கையாளர் நஃபிலான செயல்கள் மூலம் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுகிறார் என்றால் அவர் பார்க்கின்ற கண்ணாக அல்லாஹ் ஆகி விடுகின்றான். மேலும் அவர் கேட்கின்ற காதாகவும் அவன் ஆகி விடுகின்றான். அவர் பிடிக்கின்ற கையாக அவன் ஆகி விடுகின்றான். அவர் நடக்கின்ற காலாக அவன் ஆகி விடுகின்றான். அல்லாஹ் கூறுவதாக இன்னொரு அறிவிப்பில் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நான் அவர் பேசுகின்ற நாவாகி விடுவேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான். இவர்களைப் பற்றியே அல்லாஹ் **மன் ஆதா லிவலிய்யன் ஃபகத் அஸன்துஹு லில்ஹர்ப்** - எவர் எனது நேசத்திற்குரியவரிடம் விரோதத்தை வெளிப்படுத்து கின்றாரோ அவர் போர் செய்யத் தயாராகட்டும் என்று கூறியுள்ளான். இந்த அளவு தனது அடியாருக்காக அல்லாஹ் தனது தன்மான உணர்வை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். பிரிதோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

ஒரு நம்பிக்கையாளரின் உயிரை வாங்கும்போது எனக்கு ஏற்படும் சலனம் போன்று வேறு எந்த விஷயத்திலும் எனக்கு ஏற்படுவதில்லை. எனவேதான் அவர் பலமுறை நோயுற்று பிறகு குணமடைந்து விடுவார். இதன் காரணமாகவே அல்லாஹ் அவரது உயிரைப் பறித்துக் கொள்ளாமல் அவர் இன்னும் கொஞ்ச காலம் உலகில் வாழ்வதற்கு கால அவகாசம் வழங்குகின்றான்.

அல்லாஹ்வின் *ர:ஃபீக்* என்ற பண்பின் மூலமாக சாதாரண பொதுமக்கள் அல்லாஹ்வின் மென்மை குணத்திலிருந்தும் இரக்கக் குணத்திலிருந்தும் பலனைப் பெறுகின்றார்கள். அல்லாஹ்வை கலப்பற்ற முழுமையான மனத்தூய்மையுடன் வணங்குகின்ற, அவனை உயர்வான நண்பனாக கருதுகின்ற சில இறையடியார்கள் உள்ளனர். இவர்களில் மிக உயர்வான முன்மாதிரியாக நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்க்கின்றோம். அவர்கள் உயர்வான நண்பனாகிய அல்லாஹ்வின் *ர:ஃபீக்* என்ற பண்புக்கு எத்தனை பொருள்கள் உள்ளனவோ அவற்றிலிருந்தும் பலன்களைப் பெற்று அந்தப் பண்பை செயல்படுத்திக் காட்டினார்கள். அது மட்டுமல்ல; தனது உயர்வான நண்பனாகிய இறைவனைச் சந்திக்க அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் இருந்தார்கள். அவர்கள் மரணிக்கின்ற சமயத்தில்கூட மீண்டும் மீண்டும் **ஃபிர் ரஃபீக்கில அஃலா** - நான் எனது உயர்வான நண்பனாகிய எனது இறைவனிடம் செல்கின்றேன் என்ற சொற்களே அவர்களது நாவில் வந்து கொண்டிருந்தன. இந்த உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றியவாறு நாமும் உலகின் பக்கம் நமது பார்வையைச் செலுத்துவதற்குப் பகரமாக நமது உயர்வான நண்பனாகிய இறைவனின் பக்கம் நமது பார்வை இருக்க வேண்டும். பிறகு அல்லாஹ் தனது இந்த பண்பிற்கேற்ப எப்படிப்பட்ட உயர்வான சிறந்த நண்பனாகவும் தோழனாகவும் ஆகி விடுகின்றான் என்பதை நீங்கள் பாருங்கள். பிறகு அவன் நம்மை துன்பங்களிலிருந்து வெளியேற்றுவான். இவ்வாறே அவன் தனது பண்பு பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக தெரிவித்துள்ளான். ஆனால், அந்த இறை பண்பிலிருந்து பலன் பெறுவதற்கு நாமும் அந்த பண்பை மேற்கொண்டு நடப்பது அவசியமாகும்.

இன்று இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகள் மீண்டும் தங்களது தீய தாக்குதல்களை நடத்தி வருகின்றன. நாம் நமது ஒரே நண்பனாகிய இறைவனுடன் ஒன்றியிருப்பதன் மூலமாகவே இவர்களை எதிர்த்து நின்று நம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஏனென்றால் இஸ்லாமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தீவிரவாதத்தைத்தான் போதனை செய்துள்ளார்கள் என்று கூறி இவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றார்கள். இன்றைய நாட்களில் குறிப்பாக இஸ்லாத்தின் எதிரி ஒருவர் மிக இழிவான தீய எண்ணத்துடன் செயல்பட்டு வருகின்றார். இன்று மார்ச் 28 ஆம் தேதி. இன்றைய நாளில்தான் ஹாலந்தில் உள்ள வெல்டர்ஸ் என்ற பாராளுமன்ற உறுப்பினர் திருக்குர்ஆனுக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் எதிராக ஒரு Film-ஐ நான் வெளியிடுவேன் என்று கூறியுள்ளார். ஆனால், நேற்றே அவர் இந்த Film-ஐ வெளியிட்டுள்ளார். ஒரு சிறிய டிவி சேனல் அந்த Film-ன் சில பகுதிகளை ஒளிபரப்பி இருக்கின்றது. பிறகு இன்டர்நெட்டிலும் அவர் இதை கொடுத்துள்ளார். பெரிய டிவி சேனல்கள் இந்த Film-ஐ வாங்க மறுத்து விட்டன. இறைவன் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! இவர்கள் எப்போதும் இதை மறுத்தே வர வேண்டும். ஆனால், அவர் இந்த Film-ஐ இன்டர்நெட்டிலும் வரும்படி செய்துள்ளார். கடந்த குத்பாக்களில் நான் கூறியிருந்தது போன்றே யாரோ ஒரு நபர் இந்த பாராளுமன்ற உறுப்பினரிடம் இதைப் பற்றி கேட்ட போது அவர் சூரா முஹம்மதின் 5-வது வசனமாகிய, நீங்கள் நிராகரிப்பவர்களைப் போர்க்களத்தில் சந்திக்கும்போது (அவர்களது) கழுத்துகளை வெட்டுங்கள். நீங்கள் அவர்களது இரத்தத்தை ஓடச் செய்த பிறகு கைகளை மிக உறுதியாகக் கட்டுங்கள் (47:5) என்பதைத்தான் மிகப்பெரும் ஆட்சேபனையாக வைக்கப்போவதாக அவர் கூறியிருக்கின்றார். இது மிகவும் பழைய ஆட்சேபனையேயாகும். இவ்வாறு ஆட்சேபனை செய்கின்ற இவர்கள் போர் சமயங்களில் என்னவெல்லாம் செய்துள்ளார்கள்? என்பதை முதலில் பார்க்க வேண்டும். ஆனால், இந்த நபரின் தீய செயலைப் பாருங்கள். *இந்த வசனத்தின் அடுத்த பகுதியை இவர் கூறவில்லை.* அதில் போர் முடிந்து விட்டால் கருணை காட்டியவாறு அல்லது போர் ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு

போர்க் கைதிகளை விடுவித்துவிட வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. உண்மையில் இவ்வாறு ஏன் கட்டளையிடப்பட்டுள்ளதென்றால், இஸ்லாம் எந்த அளவு மென்மையுடன் நடந்து கொள்ளுமாறும் கூறியுள்ளது என்பது அதன் மூலமாக தெரிய வரும். எனவே, இறைகட்டளையின் இந்தப் பகுதியை அவர் கூற வேண்டியது அவசியமானதாகும். மேலும் இதுவே முழுமைபெற்ற போதனையின் சிறப்பாகும். நிலைமைகளுக்கு ஏற்பவே அந்த போதனைகள் வழங்கப்பட்டிருக் கின்றன. எல்லா விஷயத்திற்கும் பழிவாங்கியே தீர வேண்டும் என்றும் மிகவும் கடினமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் அது கூறவில்லை. மனிதர்களிடம் விலங்குகள் போல் நடந்து கொள்ளும்படியும் அது கூறவில்லை. அவ்வாறே *ஒரு கன்னத்தில் ஒருவர் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டும் அளவில் மிகவும் மென்மையுடன்* நடந்து கொள்ளும்படியும் அது கூறவில்லை. *இந்த போதனைக்கேற்ப செயல்படுவது சாத்தியமற்ற ஒன்றாகும்.* இந்தப் போதனையை ஏற்றுக் கொண்டவர்கள்தான் எல்லாரையும் விட அதிகமாக பழிவாங்கும் செயலில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தப் போதனையைப் பின்பற்றுகின்ற வெல்டர் அவர்கள் தனது முகத்தையும் கொஞ்சம் பார்க்கட்டும். எந்த அளவு அவர் தனது போதனைக்கேற்ப செயல்படுகின்றார் என்று பார்க்க வேண்டும். தற்போது மென்மை, சகிப்புத்தன்மை, மன்னிக்கும் தன்மை தொடர்பான இஸ்லாமிய போதனைகளை வெளிப்படுத்தும் வகையிலுள்ள சில திருக்குர்ஆன் வசனங்களை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன். ஆனால் அதற்கு முன்னதாக ஒரு முக்கியமான விஷயம் தொடர்பாக உங்களுக்கு கவனமூட்ட விரும்புகின்றேன்.

அஹ்மதிகள் பொதுவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்தியே வருகின்றனர். இதன் மூலமாக அவர்களுக்கு கிடைத்த அருள்கள் தொடர்பாகவும் எனக்கு கடிதங்கள் வருகின்றன. தஸ்பீஹ், தஹ்மீது ஆகியவற்றுடன் தரூதும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் கற்றுத் தந்துள்ள ஒரு துஆவையும் கிலாஃபத் நூற்றாண்டு தொடர்பான துஆக்களுடன் ஓதும்படி நான் கூறியிருந்தேன். அது ***சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ ஆலி முஹம்மத்*** என்ற துஆவாகும். இவ்வாறு தொழுகையில் (அத்தஹிய்யத்தின்போது) நாம் ஓதுகின்ற முழுமையான தரூதும் ஸலவாத்தும் இந்த துஆக்களில் அடங்கும்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீது(ன்)ம் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீது(ன்)ம் மஜீத் என்ற ஸலவாத்தையும் அதிகமாக ஓத வேண்டும். கிலாஃபத் நூற்றாண்டின் துஆக்களோடு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் இந்த துஆவை ஓதும்படி கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு எண்ணிக்கையை நான் குறிப்பிட்டுக் கூறியது ஸலவாத் ஓதும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவேயாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தரூது ஓதுதல் உறுதியாக நிலைநிற்கும் தன்மையை பெறுவதற்கான மகத்தான வழியாகும். அதை அதிகமாக ஓத வேண்டும். அதனை ஒரு சடங்கு அல்லது பழக்கம் என்ற அளவில் மட்டும் ஓதக்கூடாது. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகையும், அவர்கள் செய்த நன்மைகளையும் கண்முன் நிறுத்தி அவர்களது தகுதியில் முன்னேற்றம் கிடைப்பதற்காகவும், அவர்களுக்கு வெற்றி கிடைப்பதற்காகவும் இதனை அதிகமாக ஓத வேண்டும். இதன் விளைவாக துஆ கபூலாவதற்கான இனிய கனிகள் உங்களுக்கு கிடைக்கும். துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மூன்று வழிகளே உள்ளன. *முதலாவதாக,* ***இன் குன்தும் துஹிப்பூனல்லாஹ வத்தபிஊனீ*** - அதாவது நீங்கள் அல்லாஹ்வின் மீது நேசம் வைத்திருந்தால் என்னைப் பின்பற்றுங்கள் என்ற இறை கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி நடக்க வேண்டும். *இரண்டாவதாக,* நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அந்த நபியின் மீது தரூதும், ஸலாமும்

ஓதிக்கொண்டிருங்கள் என்ற இறை கட்டளையை செயல்படுத்துவதாகும். *மூன்றாவது வழி* என்னவென்றால், இறைவன் மீது அன்பு கொள்ளுதல்.

எனவே எதுவரை ஸலவாத் ஓதுவதில் நமக்கு கவனம் இருக்குமோ அதுவரை ஜமாஅத்தின் முன்னேற்றம், கிலாஃபத்துடன் தொடர்பு ஆகியவற்றிற்கான வழிகள் கிடைத்துக் கொண்டிருக்கும். இப்போது எதிரிகள் திருக்குர்ஆன் மீதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவதூறுகள் கூறி, சேற்றை வாரி எறிய முயற்சி செய்து வருவதால் இதைக் கருத்தில் கொண்டு இந்த சமயத்தில் நாம் அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூதும், ஸலாமும் ஓத வேண்டும். இந்த தீயவரின் முயற்சி தீய முடிவைத்தான் தருமேயொழிய அதனால் எந்த விளைவும் ஏற்படப் போவதில்லை. ஆனால், இவரின் இந்த இழிவான முயற்சியின் காரணமாக அஹ்மதிகளாகிய நாம் கோடிக்கணக்கில், பல கோடிகள் கணக்கில் ஸலவாத் ஓத வேண்டும். ஜமாஅத் அளவில் ஒரே சமயத்தில் இவ்வாறு தரூது ஓதப்படும்போது இந்த எண்ணிக்கை கோடிகள் வரை எட்டி விடும். இவ்விஷயங்களை கருத்தில் கொண்டு நாம் எந்த அளவு கவனத்துடன் தரூது ஓத வேண்டுமென்றால் அதன் மூலம் அல்லாஹ் நம் துஆக்களை கேட்க வேண்டும். மேலும் அவன் ஓதும்படி கூறியுள்ள அந்த தரூதை அவன் ஏற்றுக் கொள்வானாக! அதன் மூலமாக இஸ்லாம் மற்றும் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தின் ஒளி**, இதற்கு முன்பை விட சிறந்த முறையில் உலகிற்கு வெளிப்பட வேண்டும். எனவே, எதிரிகள் இழிவாகப் பேசுவதிலும் தீய எண்ணம் கொள்வதிலும் எல்லா எல்லைகளையும் கடந்து சென்று கொண்டிருக்கும்போது நாமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். அதனை தமது கவிதையில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

*“பகைமை அதிகமாகி கூச்சலும் கூக்குரலும் எழும்போது நாம் நமது இறைவனுடன் ஒன்றி விடுகின்றோம். அவனோடு இணைந்த நிலையில் நாம் மறைந்து விடுகின்றோம்.”*

இதற்கேற்ப அல்லாஹ்வின் முன்னிலையில் குனிந்தவாறு அவனிடம் உதவி கேளுங்கள். நமது தரூதுகளை அவன் பெற்றுக் கொண்டு அதன் காரணமாக இஸ்லாத்தைப் பற்றியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் சிறந்த முறையில் உலகின் முன்பு வைத்து, அவர்களது ஒளியை உலகிற்கு காட்டுவதற்கான தவ்ஃபீக்கை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! இப்போதுள்ள காலகட்டமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டமேயாகும். எனவே, நாம் அல்லாஹ்விடம் அல்லாஹ்வே! இறுதி வெற்றி ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வெற்றியேயாகும். ஆனால் நீ எங்களது துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு அதை எங்களது காலத்திலேயே கொண்டு வருவாயாக! என்று துஆ செய்ய வேண்டும். ஹாலந்திலுள்ள ஜமாஅத் இந்த வெல்டர் என்ற பாராளுமன்ற உறுப்பினரிடம் ஒரு விஷயத்தை தெளிவாகக் கூறிவிட வேண்டும். நாங்கள் சட்டத்தை எங்கள் கையில் எடுப்பதில்லை என்பது சரியே. அவ்வாறு சட்டத்தை எங்கள் கையில் எடுத்தவாறு நாங்கள் உங்களை பழிவாங்கவும் மாட்டோம். ஆனால், நாங்கள் வரம்பு மீறி செயல்படுகின்றவர்களை பிடிக்கின்ற அந்த இறைவனை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். நீங்கள் உங்களது இழிவான செயல்களிலிருந்து விலகவில்லையென்றால் பிறகு நீங்கள் அவனது பிடியின்கீழ் வந்து விடலாம். எனவே, இறைவனுக்கு அஞ்சியவாறு உங்கள் நிலையை மாற்றிக் கொள்ளுங்கள். நாங்கள் நண்பனாக இருக்கின்ற அந்த இறைவனை ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்த பண்பின் அடிப்படையில் அவன் இரக்கம் காட்டுபவனாகவும் இருக்கின்றான். அனுதாபத்துடன் நடந்து கொள்பவனாகவும், கருணை காட்டுபவனாகவும், இழப்புகளிலிருந்து பாதுகாப்பவனாகவும், அமைதியில் வைப்பவனாகவும் அந்த இறைவன் இருக்கின்றான். எனவே, அல்லாஹ்வின் இந்த நற்பண்புகளைக் கடைபிடித்து நடக்க முயற்சி செய்தவாறு நாங்கள் உங்கள் மீதுள்ள அனுதாபத்தில் உங்களிடம் கூறிக் கொள்கிறோம். நீங்கள் இப்படிப்பட்ட தீய செயலிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று இவரிடம் நீங்கள் கூற வேண்டும். இது இறுதியாக நாம் செய்யும் முயற்சியாகும். அதற்குப் பிறகு **அஃரிஸ் அனில் ஜாஹிலீன்** - அறிவீனர்களிடமிருந்து முகத்தை திருப்பிக் கொள்வீராக என்ற இறை கட்டளைக்கு ஏற்ப நாம்

பிரச்சனையை இறைவனிடம் ஒப்படைத்து விடுவோம். அவனுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் கண்ணியத்தை பாதுகாக்க தெரியும். மிக நன்றாக தெரியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த முழுமை பெற்ற மனிதராகிய நமது நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கின்ற துன்பங்கள் கொடுக்கப்பட்டன. அவர்களை ஏசிப்பேசியதுடன் அவர்களுக்கு எதிராக தீய சொற்களும் பயன்படுத்தப்பட்டு அன்னார் பரிகாசம் செய்யப்பட்டார்கள். ஆனால், உயர்வான நல்லொழுக்கத்தின் வடிவமாகத் திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்கெதிரில் என்ன செய்யதார்கள்? அவர்களுக்காக அன்னார் துஆ செய்தார்கள். அறிவீனர்களிடம் இருந்து நீர் முகத்தை திருப்பியவாறு சென்று விட்டால் நாம் உமது உயிரையும், கண்ணியத்தையும் நல்ல முறையில் பாதுகாப்போம். அவற்றின் மீது அவர்களால் தாக்குதல் நடத்த முடியாது என அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வாக்குறுதி வழங்கியதுபோலவே நடந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது எதிரிகளால் அவர்களது கண்ணியத்தை குறைக்கும் வகையில் எந்த பழியையும் சுமத்த முடியவில்லை. அந்த எதிரிகள் இழிவடைந்து தோல்வி அடைந்து அவர்களது கால்களில் வந்து விழுந்தார்கள். அவர்களின் கண் முன்னாலேயே அவர்கள் அழிந்து போனார்கள்.

இன்றும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைவன் உயிருள்ள இறைவனாவான். எனவே, தங்களது இழிவான முயற்சிகளில் எதிரிகள் ஒருபோதும் வெற்றியடைய முடியாது. இன்ஷா அல்லாஹ். மாறாக, அவர்கள் இழிவடைந்து தோல்வியைத் தழுவுவார்கள். ஆனால், நம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள பணியைச் செய்து கொண்டே செல்வது நமது கடமையாகும். உலகிற்கு அமைதியை வழங்கும் வகையில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக மென்மையாக நமது பணிகளைச் செய்து கொண்டே செல்ல வேண்டும்.

மென்மையைக் கடைபிடிப்பது தொடர்பாக அல்லாஹ் நமக்கு என்ன கட்டடளை யிட்டுள்ளான்? இது தொடர்பாக அல்லாஹ் சூரா அஷ்ஷுூராவின் 41-வது வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

*ஒரு தீங்குக்குரிய கூலி அதே அளவு தீங்கேயாகும். ஆனால், சீர்திருத்தம் ஏற்படும் என்ற நிபந்தனையின் பேரில் எவர் மன்னிக்கின்றாரோ அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடமுள்ளது. நிச்சயமாக அவன் அநீதி இழைப்பவர்களை நேசிப்பதில்லை. (42:41)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

செய்யப்பட்ட தீங்கிற்குரிய கூலி அதே அளவு தீங்கேயாகும். ஆனால், எவர் பாவத்தை மன்னிக்கின்றாரோ, மன்னிப்பதன் மூலம் சீர்திருத்தம் ஏற்பட வாய்ப்பிருக்கும் சந்தர்ப்பத்தில் மன்னிக்கின்றாரோ, அதன் மூலம் எந்தத் தீங்கும் உருவாகாமல் மன்னிப்பதற்கு உகந்த சரியான இடத்தில் மன்னிக்கின்றாரோ அவர் அதற்கான நற்பலனைப் பெற்றுக் கொள்வார். இந்த வசனத்திலிருந்து எல்லா இடங்களிலும் அவசியமற்ற நிலையில் தீமையை எதிர்த்து நிற்க வேண்டும் என்பதும் தீங்கு விளைவிப்பவர்களுக்கும் அநீதியிழைப்பவர்களுக்கும் தண்டனை வழங்காமல் இருக்க வேண்டும் என்பதும் இஸ்லாமிய போதனை அல்ல என்று தெரிய வருகின்றது. மாறாக, அதற்குரிய இடமும் சந்தர்ப்பமும் பாவங்களை மன்னிப்பதற்கான சந்தர்ப்பமா? அல்லது தண்டனை வழங்கப்படும் சந்தர்ப்பமா? என்பதை நாம் பார்க்க வேண்டும். குற்றவாளிக்கும் பொதுமக்களுக்கும் எது சிறந்ததாக இருக்குமோ அந்த நிலையை கைக்கொள்ள வேண்டும். சில நேரங்களில் ஒரு குற்றவாளியின் பாவங்கள் மன்னிக்கப்படும் போது அவர் தவ்பா செய்கின்றார். ஆனால், சில நேரங்களில் ஒரு குற்றவாளியின் பாவங்கள் மன்னிக்கப்பட்டால் அவர் இன்னும் பாவங்களைச் செய்வதில் தைரியமிக்கவராக ஆகி விடுகின்றார். எனவே, குருடர்கள் போன்று பாவங்களை மன்னிக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். மாறாக, உண்மையான நன்மை எந்த விஷயத்தில் இருக்கின்றது என்பதை கவனத்துடன் பார்க்க வேண்டும். அது மன்னிப்பதில் இருக்கின்றதா? தண்டிப்பதில் இருக்கின்றதா? எந்த செயல் அதற்குரிய இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றதாக இருக்கின்றதோ அதை செய்யுங்கள் என்றே அல்லாஹ் கூறியுள்ளான்.

மனிதர்களைப் பார்க்கும்போது தெளிவாக தெரியும் விஷயம் என்னவென்றால் சிலர் காழ்ப்புணர்ச்சியில் எந்த அளவு எல்லை மீறி செயல்படுகின்றார்கள் என்றால் தமது பாட்டனார், முப்பாட்டனார் ஆகியோர் வெளிப்படுதிய வெறுப்பை அவர்கள் நினைவில் வைக்கின்றார்கள். அவ்வாறே சிலர் மன்னிப்பதிலும் கண்டும் காணாமல் விட்டு விடுவதிலும் அதன் இறுதி எல்லை வரை சென்று விடுகின்றார்கள். அதன் காரணமாக அவர்களது கண்ணியத்திற்கும் தன்மான உணர்வுக்கும் எதிராக அவற்றிற்கு களங்கம் கற்பிக்கும் அளவில் அவர்களின் மன்னிக்கும் தன்மை இருக்கின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டே திருக்குர்ஆன் ஒவ்வொரு நல்லொழுக்கமும் அதற்குரிய இடம் மற்றும் சந்தர்ப்பம் ஆகியவற்றிற்கு ஏற்ப வெளிப்பட வேண்டும் என்ற நிபந்தனையை வைத்திருக்கின்றது. சந்தர்ப்ப சூழ்நிலைக்கும் இடத்திற்கும் எதிராக இருக்கும் நல்லொழுக்கத்தை அது ஏற்றுக் கொள்ளவில்லை.

எனவே, இப்படிப்பட்ட இஸ்லாமிய போதனைகளைத்தான் எதிரிகள் ஆட்சேபனை செய்து வருகின்றார்கள். எதுவரை போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதோ அதுவரை எதிரிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பதால் அதற்கு எதிரில் கடுமையைக் காட்டி எதிர்த்துப் போரிட வேண்டும். ஆனால், போர் முடிந்து விட்டால் பிறகு எவர் மீதும் அநீதியிழைக்கக் கூடாது. கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். இதைத் தவிர சமுதாயத்தில் பிரச்சனைகள் இருந்தால் அதற்கு தீர்வு காண்பதற்குக் கடுமையைக் கடைபிடிப்பதன் மூலமாகத்தான் சமுதாயத்தில் சீர்திருத்தம் ஏற்படுமா? அல்லது மென்மையைக் கடைபிடிப்பதன் மூலம் சீர்திருத்தம் ஏற்படுமா? என்று பார்க்க வேண்டும். ஒரு குற்றவாளியிடம் மென்மையுடனும், அனுதாபத்துடனும், மன்னிக்கும் தன்மையுடனும் பரிமாறுவதன் விளைவாக அவரிடம் சீர்திருத்தம் ஏற்பட்டு விடும் என்ற நம்பிக்கை இருந்தால், மேலும் தனக்கு ஏற்பட்ட கட்டாய சூழ்நிலை காரணமாக அவர் அந்த குற்றத்தைச் செய்திருந்தால் அவர் குற்றம் செய்வதையே வழக்கமாக கொண்டவரல்ல என்பதை அறிந்து அவரை மன்னிக்க வேண்டும். ஆனால், குற்றம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கும் ஒருவரை நீங்கள் மன்னித்துக் கொண்டேயிருந்தால் பிறகு அதனால் சமுதாயத்தின் அமைதி சீர்குலைந்து போய் விடும்.

தன்னை உண்மையில் வணங்கும் அடியார்களின் உற்ற நண்பனாக விளங்கும் இறைவன் மற்றவர்களது தீங்கிலிருந்தும் இழப்புகளிலிருந்தும் தனது அடியார்களைக் காப்பாற்றும் வகையில் உள்ள சூழ்நிலையை அவர்களுக்காக உருவாக்குகின்றான். அவர்களைத் துன்பங்களிலிருந்தும் வெளியேற்றுகின்றான். நோயின் துன்பத்திலிருந்தும் வெளியேறும் வழிகளை தனது *ர:பீக்* (தோழன்) என்ற பண்பை வெளிப்படுத்தியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலம் கற்றுத் தந்தது போல் நமக்கும் அவன் உதவுவான். சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கமில்லாமல் நாம் எந்தச் செயலை செய்தாலும் நமது நோக்கம் நன்மையாகாது. மாறாக, அது அநீதியிழைப்பதாகி விடும். பிறகு அப்படிப்பட்ட அநீதியிழைப்பவர்களை அல்லாஹ் நேசிக்க மாட்டான்.

சூரா அஷ்ஷுூராவின் ஒரு வசனத்தை நான் உங்கள் முன்னால் ஓதினேன். அதற்கு அடுத்துள்ள வசனங்களில் இன்னும் தெளிவாக இஸ்லாத்தின் அழகிய போதனைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

எவர்கள் தங்களுக்கு அநீதியிழைக்கப்பட்டதன் பின்னர் (அதே அளவு) பழிவாங்கு கின்றார்களோ அவர்கள் மீது எந்தக் குற்றமுமில்லை.

மக்களுக்கு அநீதியிழைத்து நியாயமின்றிப் பூமியில் வரம்பு மீறுபவர்களின் மீது மட்டுமே குற்றம் இருக்கும். இத்தகையவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை உண்டு.

ஒருவர் பொறுமையை கடைபிடித்து மன்னித்து விடுவாரானால் நிச்சயமாக அது துணிவுமிக்க செயலைச் சேர்ந்ததாகும். (42:42-44)

பழிவாங்குவதற்கு அனுமதி கிடைத்திருப்பதால் சட்டத்தை தனது கையில் எடுத்தவாறு எப்படி விரும்புகின்றோமோ அப்படி பழிவாங்கிக் கொள்ளலாம் என்று இதற்கு ஒருபோதும் பொருள் அல்ல. திருக்குர்ஆன் பற்றிய அறிவுள்ளவர்கள் இதன் சரியான உண்மையைப் புரிந்து கொள்வார்கள். ஆனால், எதிரிகள் ஆட்சேபனை செய்யக்கூடியவர்களாக இருப்பதால் அவர்கள் இந்த விஷயங்களில்கூட ஆட்சேபனை செய்வார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தனது மேலதிகாரியிடம் செல்லும்படி அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்த பிறகு மேலதிகாரிகளின் கட்டளையை ஏற்று நடக்க வேண்டும். எனவே, இக்காலத்திலும் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற கருத்து கூறப்பட்டு வருவதால் இன்றைய சூழ்நிலையில் இந்த வசனத்தின் கருத்து சட்டத்திற்கு உட்பட்டு நடந்தவாறு பழிவாங்குபவர் பழிவாங்க வேண்டும் என்பதாகும். சட்டத்தை தனது கையில் எடுப்பதற்கான அனுமதியில்லை. இதன் மூலம் அநீதியின் இன்னும் பல கதவுகள் திறந்து விடும். எனவே, அநீதிக்கு பழிவாங்குவது, தன்னைத் தானே தற்காத்துக் கொள்வது ஆகியவற்றை சட்டத்தின் வரம்புக்குள் நின்றவாறு செய்வதற்கு அனுமதி இருக்கின்றது. எதிரிகள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்வதற்குப் பகரமாக இதற்கு வேறு விளக்கங்களையும் கருத்துக்களையும் கூறி வருகின்றார்கள்.

இஸ்லாம் செயல் அளவிலான ஒரு போதனையைத்தான் தந்துள்ளது. ஒவ்வொருவருக்கும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை மன்னிப்பதற்கான தைரியம் இல்லாமலிருப்பதால் உங்களை நீங்களே தற்காத்துக் கொள்ளலாம் என்று கூறியுள்ளது. ஆனால், சட்டத்தின் வரம்பிற்குள் நின்றவாறு அதை செயல்படுத்த வேண்டும். ஆனால், அல்லாஹ் பிடிக்க ஆரம்பிக்கும்போது எவர்கள் நியாயமின்றி அநீதியிழைத்து மற்றவர்களது உரிமைகளைப் பறிக்கின்றார்களோ அவர்களையே பிடிக்கின்றான். இதில் நல்லொழுக்கம், மார்க்கம், சமுதாயம் மற்றவர்களது உணர்வுகள் ஆகியவற்றிற்கான உரிமைகளும் அடங்கும். இந்த உரிமைகளை சீர்குலைப்பவர்களாக இருக்கின்றவர்கள் மற்றவர்களுக்கு காரணமின்றி இழப்பை ஏறபடுத்தக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். எனவே, இது இறைவனின் கட்டளைக்கு எதிராக செய்யப்படும் கிளர்ச்சியாக இருக்கின்றது. அவ்வாறு அநீதி இழைக்கக்கூடியவர்கள் பிறர் மீது அநீதியிழைத்த பிறகும்கூட தங்கள் நாட்டிலுள்ள சட்டத்தின் காரணமாக தப்பி விடுகின்றார்கள். இவ்வாறே இன்றைய நாட்களில் ஐரோப்பாவில் கருத்து சுதந்திரம் என்ற பெயரில் மற்றவர்களது உணர்வுகளுடனும் மார்க்க போதனைகளுடனும் விளையாடுவதற்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கின்றது. ஆனால், எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானன் இறைவனாக இருக்கின்றான் என்பதை இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவனுக்கு முன்னால் ஒவ்வொருவரும் செல்ல வேண்டியது வரும். அவன் கிளர்ச்சி செய்பவர்களுக்காக மறுமை நாளில் வேதனை அளிக்கக்கூடிய தண்டனையை வழங்குவான்.

திருக்குர்ஆனின் போதனைகளில் சகிப்புத் தன்மையை கடைபிடிப்பதன் பக்கமும் பொறுமையைக் கைக்கொள்வதன் பக்கமும் எந்த அளவு கூறப்பட்டிருக்கின்றது என்றால், நான் தற்போது ஓதிய வசனங்களில் இறுதியில் அல்லாஹ் கூறுகின்றான். உங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கும் உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் எதிராக பழிவாங்க உங்களுக்கு உரிமை இருக்கின்றது. ஆனால், உயர்வான நல்லொழுக்கம் நீங்கள் பொறுமையைக் கடைபிடித்து மற்றவர்கள் உங்களுக்கு இழைக்கின்ற கொடுமைகளை பொறுமையுடன் சகித்துக் கொள்வதேயாகும். நீங்கள் அவர்களை மன்னிப்பதன் மூலம் அவர்களிடம் சீர்திருத்தம் ஏற்படுவதாக இருந்தால் அவர்களது நிலைமை சரியாகிவிடுமென்றால் அவர்களை மன்னிக்க வேண்டும் என்றே அல்லாஹ் கூறுகின்றான்.

ஒரு யூதப் பெண்மனி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விஷம் கொடுக்க முயற்சி செய்தபோது இறுதியில் அந்தப் பெண்ணையும் அவர்கள் மன்னித்து விட்டார்கள். பல சந்தர்ப்பங்களிலும் தன் மீது கொடுமை இழைத்தவர்களை அவர்கள் மன்னித்திருக்கின்றார்கள். எல்லாவிதமான ஆற்றலும் பிறர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குரிய சக்தியும் இருந்த சமயத்தில் மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது நேசத்திற்குரியவர்கள் மீதும் தன் மீதும் கொடுமை இழைத்தவர்களை மன்னித்து விட்டார்கள். வரலாற்றை எழுதியவர்களும்

இஸ்லாத்தின் எதிரிகளும்கூட இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள். அவ்வாறிருக்க இஸ்லாத்தின் போதனைகளில் கடுமை இருப்பதாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மென்மை, சகிப்புத்தன்மை என்றால் என்னவென்றே தெரியாது என்றெல்லாம் இவர்களால் எப்படி அவதூறாகக் கூற முடிகின்றது?

இணைவைப்பவர்கள் அல்லது ஏக இறைவனை வணங்காமல் இருப்பவர்கள் தங்களது இந்தச் செயலின் காரணமாக அல்லாஹ்வின் பிடியின் கீழ் வந்து விடக்கூடாதே என்ற கவலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உயிரையே மாய்த்துக் கொள்ளும் நிலை இருந்தது. தன் மீதும் தன்னை ஏற்றுக் கொண்டவர்கள் மீதும் எதிரிகள் இழைத்த கொடுமைகளின் காரணமாக அவர்கள் இறைவனின் தண்டனைக்கு ஆளாகிவிடக்கூடாதே என்ற கவலை அவர்களை வாட்டியது. அவர்களின் இந்த நிலையை எடுத்துக் கூறியவாறு திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

***ல அல்லக பாஹிஉன் ந:.ப்ஸக அல்லா யகூனு மு:.மினீன்*** - அவர்கள் ஈமான் கொள்ளவில்லை என்பதற்காக உமது உயிரையே நீர் மாய்த்துக் கொள்வீரா? என அல்லாஹ் அவர்களிடம் கேட்கின்றான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இந்த வசனத்தைக் குறிப்பிட்டு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நிராகரிப்பவர்கள் ஈமான் கொள்ள வேண்டும் என்ற கவலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவு வேதனையுடனும், கவலையுடனும், உருக்கத்துடனும் துஆ செய்துள்ளார்கள் என்றால் அதன் காரணமாக அவர்கள் தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்வார்கள் என்ற அபாயம் இருந்தது. இதைப் பார்த்த அல்லாஹ் இவர்களுக்காக நீர் இவ்வளவு கவலையடைய வேண்டாம். உமது உள்ளத்தை இந்த அளவு துக்கத்திற்கு இரையாக்காதீர். ஏனென்றால், இவர்கள் ஈமான் கொள்வதில் அக்கறையற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்களது நோக்கங்கள் வேறானவையாக இருக்கின்றன. இந்த வசனத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்த்து, நபியே! எந்த அளவு நீர் தைரியத்துடனும் முழுமையான கவனத்துடனும், வேதனையுடனும் உமது ஆன்மாவை துன்பத்தில் ஆழ்த்தியவாறு இந்த மக்களின் நேர்வழிக்காக துஆ செய்கின்றீரோ அந்த துஆக்களில் தாக்கம் எந்த வகையிலும் குறைவானதாக இல்லை. ஆனால், துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஓர் நிபந்தனை என்னவென்றால், எவருக்காக துஆ செய்யப்படுகிறதோ அவர் கடுமையான காழ்ப்புணர்ச்சியுடையவராகவும், அக்கறையற்ற தீய இயல்புள்ள மனிதனாகவும் இருக்கக் கூடாது. அவ்வாறிருந்தால் அந்த மனிதனுக்காக செய்யப்படும் துஆ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆக, மனிதர்களிடம் அனுதாபம் காட்டுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான முன்மாதிரி இவ்வாறு இருந்திருக்கின்றது. போர் செய்யும் இயல்பை மட்டுமே கொண்ட மனிதர் இவ்வாறு தன்னை வேதனையில் ஆழ்த்திக் கொண்டு தனது உயிரை அழித்துக் கொள்ளும் நிலைக்கு செல்வாரா? பழிவாங்கும் எண்ணமுள்ள ஒருவர் தன் மீது அநீதி இழைக்கக் கூடியவர்களை இந்த அளவு திறந்த உள்ளத்துடன் மன்னிப்பாரா? அல்லாஹ் இந்த அறிவுக் குருடர்களுக்கு ஒளியை வழங்குவானாக! நமது பணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றியவாறு அசுத்தங்களில் ஆழ்ந்திருக்கும் இவ்வுலக மக்களின் நன்மைக்காக துஆ செய்வதேயாகும். அகிலத்திற்கே அருட்கொடையாக அனுப்பப்பட்ட அந்த நபியினைப் பின்பற்றுபவர்களாக நாம் இருக்கின்றோம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

***வமா அர்ஸல்னாக்க இல்லா ரஹ்மத்தல் லில் ஆலமீன்*** - முழு உலகங்களுக்கும் அருட்கொடையாக நாம் உம்மை அனுப்பியுள்ளோம் என்ற வசனம் ஒவ்வொரு நல்லொழுக்கத்திற்குரிய நேர்வழியைக் காட்டுபவர்களாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்ததனால்தான் அவர்களுக்கு பொருந்துகிறது. அவர்கள் நல்லொழுக்கம், பொறுமை, மென்மை

மற்றும் செல்வத்தை வழங்குவது, அடிப்பது ஆகிய எல்லா சீர்திருத்தத்திற்கான வழிமுறைகளையும் நிறைவேற்றி விட்டார்கள். மக்களுக்கு இறைவன் பக்கம் கவனமூட்டினார்கள். செல்வத்தை வழங்குவதிலும், அறிவுப்பூர்வமான ஆதாரங்களை எடுத்துக் கூறுவதிலும் அவர்கள் எந்தக் குறைவும் வைக்கவில்லை. சீர்திருத்தத்திற்கான ஒரு வழிமுறை அடிப்பதாகும். எவ்வாறு ஒரு தாய் தனது பிள்ளையை அடித்து சீர்திருத்துவாளோ அதே போன்ற வழிமுறையையும் அவர்கள் மேற்கொண்டு நடந்தார்கள். எனவே அந்த வகையில் அடிப்பதும்கூட அல்லாஹ்வின் அருட்கொடையாக இருக்கின்றது. எந்த மனிதர்களுக்கு வேறு எந்த வழிமுறையாலும் புரிய வைக்க முடியாமல் இருக்கின்றதோ அவர்களுக்கு இறைவன் இறுதியில் இந்த அடிக்கின்ற வழிமுறை மூலமாக புரிய வைக்கின்றான். அதன் மூலமாக அவர்கள் இரட்சிப்பைப் பெற வேண்டியுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருள்களின் வடிவமாக இருந்தார்கள். அவர்களது ஒவ்வொரு செயலும் போதனையும் இறைவனின் அருட்கொடையாகவே இருந்தன. அப்படிப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு சொல்லும் செயலும் உலகிற்கு அருட்கொடையாகவும் உலக மக்களுக்கு அனுதாபம் காட்டக் கூடியதாகவும் இருக்கின்றது. அவர்கள் அநீதியான போதனைகளைத் தந்தார்கள் நவூதுபில்லாஹ் என்று கூறுவது அவர்கள் மீது செய்யும் அநீதியாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுடன் மென்மையுடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்வது தொடர்பாக தனது ஆவலை, துடிப்பை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதை காட்டுவதற்காக சில நபிமொழிகளை உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன்.

*ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“நீங்கள் எளிதை ஏற்படுத்துங்கள். துன்பத்தை ஏற்படுத்தாதீர்கள். நீங்கள் நற்செய்திகளைக் கூறுங்கள். வெறுப்புணர்வை ஏற்படுத்த வேண்டாம்.”

அவர்கள் இவ்வாறு போதித்திருக்கும்போது அவர்கள்தான் எல்லாரை விடவும் சிறந்த முறையில் இப்போதனைக்கு ஏற்ப செயல்படக்கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

*ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“ஒரு வியாபாரி மக்களுக்கு கடன் கொடுத்து வந்தார். வறியவராக துன்பத்தில் இருக்கின்ற எவரையாவது எப்போது பார்த்தாலும், அவர் தனக்கு கீழ் வேலை பார்ப்பவர்களிடம் இவரிடம் கண்டும் காணாதது போல் நடந்து கொள்ளுங்கள் என்று கூறுவார். அப்போதுதான் அல்லாஹ்வும் அவருடன் கண்டும் காணாமல் நடந்து கொள்வான் என்று தன்னைப் பற்றிக் கூறுவார். மேலும் இவ்வாறு துன்பத்தில் இருப்பவர்களிடம் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு அவர் அதிகமாக வலியுறுத்திக் கேட்காமல் இருந்து வந்தார். இதன் காரணமாக அல்லாஹ்வும் அவரிடம் கண்டும் காணாமல் நடந்து கொண்டான்.”

ஆக, இப்படிப்பட்டவர்கள்தான் அல்லாஹ்வின் பண்பை மேற்கொண்டு நடப்பவர்களாக இருந்தார்கள். அதற்காக அவர்கள் முயற்சி செய்து வந்தார்கள். பிறகு அல்லாஹ்வும் அப்படிப்பட்டவர்களிடம் சிறந்த முறையில் பரிமாறுகின்றான்.

*ஹஸ்ரத் ஹுதைபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:*

அல்லாஹ் செல்வத்தை வழங்கியிருக்கின்ற அவனது அடியார்களில் சிலர் அல்லாஹ்வின் முன்பு கொண்டு வரப்படுவார்கள். அல்லாஹ் அவர்களிடம் நீங்கள் இந்த உலகில் என்ன நற்செயலைச் செய்தீர்கள்? என்று கேட்பான். அதற்கு அவர்கள் எனது இறைவா! நீ எனக்கு செல்வத்தை வழங்கினாய். அதனால் நாங்கள் மனிதர்களிடம் பொருள்களை வாங்கி விற்று கொடுக்கல், வாங்கல் நடத்தி வந்தோம். கண்டும் காணாமல் விடுவதும் மென்மையாக பரிமாறுவதும் எங்களது பழக்கமாக

இருந்தது. நாங்கள் நல்ல நிலையில் வசதி படைத்தவர்களிடம் பரிமாறும்போது அவர்களுக்கு எளிதையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுப்போம். வறியவர்களுக்கும் துன்பத்தில் இருப்பவர்களுக்கும் கடனைத் திருப்பிக் கொடுப்பதில் கால அவகாசம் வழங்கினோம் என்று அவர்கள் கூறுவார்கள். இதைக் கேட்கும் அல்லாஹ் நான் எனது அடியார்களிடம் கண்டும் காணாமல் நடந்து கொள்வதற்கு அதிகம் உரிமையுள்ளவனாக இருக்கின்றேன். எனவே, எனது அடியார்களை நான் கண்டும் காணாமல் விட்டு விடுகின்றேன் என்று கூறுவான்.

இப்படிப்பட்ட மக்கள் அல்லாஹ்வின் கருணையைப் பெறுவதற்காக மக்களிடமும் கருணையுடன் நடந்து கொள்வார்கள்.

பிறகு இன்னொரு நபிமொழி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

*ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*
**ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“மென்மை எந்தப் பணியில் இருந்தாலும் அது அந்தப் பணியை அழகானதாக ஆக்கி விடும். எதிலிருந்து மென்மை அகற்றுப்பட்டு விடுமோ அது அந்தப் பணியை மோசமாக்கி விடுகிறது.”

*ஹஸ்ரத் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“நெருப்பு யார் மீது ஹராமாக்கப்பட்டுள்ளது? என்று நான் உங்களுக்கு கூறட்டுமா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்டார்கள். பிறகு கூறினார்கள். எவர்கள் மக்களுக்கு அருகில் இருந்தவாறு அவர்களுக்கு எளிதை ஏற்படுத்துகின்றார்களோ, வசதிகளை வழங்குகின்றார் களோ அப்படிப்பட்ட ஒவ்வொருவர் மீதும் நெருப்பு விலக்கப்பட்டிருக்கிறது.”

**பிரிதோரிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“எவர் மென்மையுடனும் கனிவுடனும் நடந்து கொள்ளவில்லையோ அவர் எல்லா வகையான நன்மைகளிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டவராவார்.”

*ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“ஆயிஷாவே! அல்லாஹ் மென்மையானவன். மென்மையாக நடந்து கொள்வதை விரும்புகின்றான். மென்மையினை கைக்கொள்வதன் மூலமாக அவன் எவற்றை வழங்குகின்றானோ அவற்றை, கடினத்தை மேற்கொண்டு நடக்கும் போது அவன் வழங்கமாட்டான். மென்மையைத் தவிர வேறு எதனாலும் அவன் இந்த அளவு வழங்குவதில்லை.”

அல்லாஹ்வின் அன்பையும் நேசத்தையும் பெற ஒவ்வொரு நேரமும் ஆவலுடன் இருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் இப்படிப்பட்ட போதனைகளைக் கூறி விட்டு அவர்கள் அதனை செய்யாமல் இருந்திருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா?

*ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“எவர்களிடம் இந்த மூன்று விஷயங்கள் இருக்குமோ அவர்களை அல்லாஹ் தனது பாதுகாப்பிலும் கருணையிலும் வைப்பான். மேலும் அவரை தனது சுவர்க்கத்தில் நுழையச் செய்வான்.

*முதலாவது விஷயம்,* அவர் பலவீனமானவர்களிடம் கனிவுடனும், மென்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். *இரண்டாவது விஷயம்,* அவர் பெற்றோர்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். *மூன்றாவது விஷயம்,* அவர் தனக்கு கீழே வேலை செய்பவர்களிடமும், தனது ஊழியர்களிடமும் நல்ல முறையில் பரிமாற வேண்டும்.

*ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*
**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

"ஆயிஷாவே! மென்மையாக நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ் நன்மை செய்பவர்களுக்கு நன்மையை எட்ட வைப்பதற்கு எண்ணுகின்றபோது அவர்களுக்கு மென்மையான பரிமாற்றத்தின் கதவுகள் பக்கம் வழிகாட்டுவான்."

*ஹஸ்ரத் முஆவியா பின் அல்ஹகம் சுல்மி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

"நான் தொழுகையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அப்போது தொழுகையின்போதே ஒருவர் தும்மினார். நான் உரத்த குரலில் **யர்ஹமுகுமுல்லாஹ்** என்று கூறினேன். இதைக் கேட்ட மக்கள் என்னை முறைத்துப் பார்க்க ஆரம்பித்தார்கள். அதை நான் மிகவும் தீயதாக உணர்ந்தேன். அதைப் பார்த்த நான், என்னை நீங்கள் எல்லாரும் ஏன் முறைத்துப் பார்க்கின்றீர்கள்? என்று கேட்டேன். அப்போது மக்கள் தொழுது கொண்டிருக்கும் நிலையிலேயே பேச ஆரம்பித்தார்கள். இதைப் பார்த்த மற்றவர்கள் தங்களது தொடைகளில் தங்களது கைகளால் அடிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் என்னை அமைதியாக இருக்கும்படி சைகையாக சுட்டிக்காட்டுவதைக் கண்ட நான் அமைதியாக இருந்து விட்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுது முடித்ததும் இறைவன் மீது ஆணையாக! அவர்கள் என்னை முறைத்துப் பார்க்கவுமில்லை. எனக்கு தண்டனையும் தரவில்லை. என்னை அதட்டவுமில்லை. மாறாக, தொழுகையில் மக்களுடன் எவ்வகையிலான பேச்சும் பேசப்படக் கூடாது. தொழுகை தஸ்பீஹ், தக்பீஸ் (இறைவனின் தூய்மையை எடுத்துக் கூறுவது) திருக்குர்ஆனை ஓதுவது, அல்லாஹ்வை நினைவு கூறுவது ஆகியவற்றிற்காக மட்டுமே இருக்கின்றது என்று மட்டும் அவர்கள் கூறினார்கள். எனது தாயும் தந்தையும் அவர்களுக்காக அர்ப்பணமாகட்டும். நான் அவர்களுக்கு முன்பும் அவர்களுக்கு பிறகும் இவ்வளவு சிறந்த முறையில் கற்றுக் கொடுக்கின்ற அவர்களைப் போன்ற ஒருவரைக் கண்டதில்லை.

இது தன்னைப் பின்பற்றியவர்களுக்கு அவர்கள் கற்பித்த அழகிய வழிமுறையாகும். பிறகு முஸ்லிம் அல்லாத மற்றவர்களிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்வாறு பரிமாறினார்கள்? எதிரிகளிடம் எவ்வாறு பரிமாறினார்கள்? என்பதை விளக்க ஒரு சம்பவத்தை நான் கூறுகின்றேன்.

பத்ர் போரின்போது எந்த இடத்தில் இஸ்லாமிய படைகள் கூடாரமிட்டு இருந்ததோ அது பொருத்தமான இடமாக இருக்கவில்லை. இதனால் ஹபாப் பின் முன்ஸர் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நீங்கள் இறை அறிவிப்பின் அடிப்படையில் இந்த இடத்தை தேர்ந்தெடுத்துள்ளீர்களா? அல்லது போர்க்கால திட்டத்தின் அடிப்படையில் இந்த இடத்தை தேர்வு செய்துள்ளீர்களா என்று கேட்டார்கள். அதற்கு அந்த இடம் போரில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு திட்டத்தின் அடிப்படையில் மட்டும்தான் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்கள். இதனைக் கேட்ட ஹபாப் பின் முன்ஸர் (ரலி) அவர்கள் இது பொருத்தமான இடமல்ல. எனவே, நீங்கள் மக்களை நீரூற்று இருக்கும் இடத்திற்கு அருகில் கொண்டு செல்லுங்கள். அதனால் தண்ணீர் இருக்கும் இடம் நமது பிடியின் கீழ் வந்து விடும். அங்கு நாம் தடாகத்தை உருவாக்கி தண்ணீர் குடிக்கலாம் எனறு கூறினார்கள். அதனைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் நல்ல ஆலோசனையைக் கூறியுள்ளீர்கள் என்று கூறினார்கள். பிறகு அவர்கள் சஹாபாக்களுடன் சென்று தண்ணீர் இருந்த இடத்தை தமது பிடியின் கீழ் கொண்டு வந்து விட்டார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு குரைஷியர்கள் தண்ணீர் குடிப்பதற்காக அந்த தடாகத்திற்கு வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், இவர்களை தண்ணீர் குடிக்க விடுங்கள் என்று கூறினார்கள். ஏனென்றால், அவர்களை தண்ணீர் குடிப்பதில் இருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடை செய்வார்கள் என்றே சஹாபாக்கள் நினைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இல்லை; இல்லை. இவர்களை தண்ணீர் குடிக்க விடுங்கள் என்றே கூறினார்கள். எதிரிகளை தண்ணீர் குடிக்க விடாமல் துன்பத்தில் ஆழ்த்த வேண்டும் என்பதற்காகவே சஹாபாக்கள்

தண்ணீர் இருந்த இடத்தை தங்களது பிடியின்கீழ் கொண்டு வந்தார்கள். இதுவும் போர் சமயங்களில் மேற்கொள்ளப்படும் ஒரு தந்திரமாகும். ஆனால், நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ எதிரிகளை தண்ணீர் குடிப்பதிலிருந்தும் தடுப்பதற்காக தண்ணீர் இருந்த இடத்தைப் பிடிக்கவில்லை. நான் இறைவனின் பண்புகளைப் பிரதிபலிக்கக் கூடியவனாக இருக்கின்றேன். எனவே, எதிரிகளுக்கு இந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுக்க நான் விட்டு விடுவேன் என்ற எண்ணத்தில்தான் அவர்கள் அந்த இடத்தை தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தார்கள். ஆனால், எதிரிகள் இந்த இடத்தைக் கைப்பற்றி இருந்தால் அவர்கள் நம்மை இந்த தண்ணீரிலிருந்தும் தடை செய்து விட்டால் நமக்கு துன்பம் ஏற்படும் என்பதையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே அவர்கள் இந்த இடத்தை தங்கள் பிடியின் கீழ் கொண்டு வந்தது தன்னை ஏற்றுக்கொண்டவர்கள் மீதும் மற்றவர்கள் மீதும் அவர்களுக்கு இருந்த அனுதாபத்தின் விளைவாகத்தான் இருந்தது. இன்றைய நாகரிக உலகில் இதைப்போன்ற ஒரு உதாரணத்தை உங்களால் காட்ட முடியுமா?

எனவே, இந்த உயர்வான நல்லொழுக்கம், மென்மை, அனுதாபம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்த அழகிய போதனைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முகத்தையும் நீதியின் கண்களுடன் காண்பதற்கு அல்லாஹ் உலகிலுள்ள மக்களுக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக! அல்லாஹ் நமது நற்செயல்கள், நமது துஆக்கள், நமது ஸலவாத் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு நாம் விரைவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளிமயமான முகத்தை அதன் முழுமையான பொலிவுடன் உலகின் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு தெருக்களிலும் பிரகாசமாக மின்னுவதைப் பார்க்கின்ற அளவில் அல்லாஹ் நம்மை தனது அருள்களால் நிரப்புவானாக! ஆமீன். உலகம் விரைவாக அவர்களின் கொடியின் கீழ் வந்து விடட்டும். நீதியின் எதிர்பார்ப்புகளை அழித்து விட்டு அவர்களுக்கு எதிராக இழிவான தாக்குதல் நடத்தும் ஒவ்வொரு எதிரியையும் அல்லாஹ் இழிவுபடுத்துவானாக! ஆமீன்.

**இரண்டாவது குத்பாவில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஒரு வேதனை நிறைந்த செய்தியைக் கூறுகின்றேன். கடந்த மார்ச் 19 ஆம் தேதி டாக்டர் முஹம்மத் ஸர்வர் கான் சாஹிப் அவர்களை அவர்களது கிராமமான பெஷாவரில் இரவு 8.00 மணிக்கு எதிரிகள் ஷஹீதாக்கி விட்டார்கள். அழைப்பு மணி ஓசையைக் கேட்டு தனது வீட்டிலிருந்து வெளியே வந்த அவர்களை அடையாளம் தெரியாத சில நபர்கள் துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கினார்கள். *இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்*. அவர்களது வயது 74 ஆகும். 1957-ல் அவர்கள் பைஅத் செய்தார்கள். மிகவும் தைரியம் நிறைந்த நல்ல மனிதரான அவர் அஹ்மதிய்யத்திற்காக பல தியாகங்களைச் செய்துள்ளார். Clinic நடத்தி வந்த இவரது கைகளில் அல்லாஹ் குணமளிக்கும் தன்மையை வழங்கியிருந்தான். இதனால் தனது பகுதியில் இவருக்கு நல்ல புகழ் இருந்தது. இதற்கு முன்னரும் அவர் மீது கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் அதிலிருந்தும் அவர் தப்பி விட்டார். மிகவும் சிறந்த வீரர். எதிரிகள் கிராமத்தை விட்டு செல்லும்படி அவரிடம் கூறிய பிறகும் அவர் தனது கிராமத்தை கைவிட்டு விட்டுச் செல்லவில்லை. அவர்களுக்கு 6 மகள்களும், 3 மகன்களும் இருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்களுக்கு பொறுமையை வழங்கி இவர்களை விட்டு விட்டுச் சென்ற ஷஹீதின் தியாகத்தை ஏற்றுக்கொண்டு அவரது தகுதியை உயர்த்தி, அவருக்கு சுவர்க்கத்தில் உயர்வான பதவிகளை வழங்குவானாக! ஆமீன்.

**JUMUA KUTHBA**
***HADHRAT KHALIFATUL MASIH V***
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 28.03.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**